ISSN : 2456-821X அவையம் 3(1) 2019 ப.எண். 20-24

SACRED HEART RESEARCH PUBLICATIONS
புதிய அவையம்
SACRED HEART COLLEGE

புதிய அவையம்

# ஹிமானா சையத்தின் 'மரியம்மா' சிறுகதைத் தொகுப்பில் இசுலாமிய மாண்புகள்

***அ.அஸ்கர், எம்.ஏ., எம்.ஃபில்,***
***உதவிப்பேராசிரியர் &***
***முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,***
***இசுலாமியாக் கல்லூரி (தன்னாட்சி)***
***வாணியம்பாடி - 635 752***
***வேலூர் மாவட்டம்.***

***கட்டுரை பெறப்பட்டது : 05.06.2019*** ***ஏற்கப்பட்டது : 14.06.2019***

**முன்னுரை**

*ஹிமானா சையத் தன் படைப்புகளில் சமுதாயத்தில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்கள், குணநலன்கள், செயல்கள், எண்ணங்கள் போன்றவற்றைப் பற்றி எழுதியுள்ளார். மக்கள் அறத்தைப் பின்பற்றி அநீதியான செயல்களை ப் புறந்தள்ளவேண்டும். அப்படி வாழும்பொழுது வாழ்வு செம்மை அடையு ம் என்பதை த் தன் படைப்புகளின் மூலம் நிறுவியுள்ளா ர். இவ்வாய்வுக் கட்டுரையில் ஹிமானா சையத் அவர்களின் மரியம்மா சிறுகதைத் தொகுப்பில் உள்ள சிறுகதைகளில் வெளிப்படும் மனித மாண்புகள் பற்றிக் காண்போம்.*

***அன்பு***

*அன்பு தான் மனித சமுதாயத்தின் அடிப்படையாகும். கடவுள் மனிதனுக்கு என்று சிறப்பாக அளித்தது அன்பு ஒன்று தான். அன்பு உள்ளங்களை இணைக்கும். மனிதனை மனிதன் நேசிப்பதற்கு அடிப்படையாக அமைவது அன்பாகும்,*

*அன்பு குறித்த திருவள்ளுவரின்,*

*"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையோர்*
*என்பும் உரியர் பிறர்க்கு"[1]*

*என்னும் குறளின் கருத்திற்கேற்ப மரியம்மா சிறுகதையில், "ஏர்வாடியில் காக்கை வலிப்பு கண்டு அனாதையாகக் கிடந்த அவனைப் பாதுகாக்கும் பொறுப்பேற்றுக் கொண்டு இங்கு அழைத்துக் கொண்டு வந்ததாக மரியம்மா சொன்னபோது எனக்கென்னவோ அந்த அம்மாவின் உள்ளம் புரிந்தது. யாருக்காவது பணிவிடை செய்தே பழக்கபட்டுப் போன அந்த மூதாட்டியின் செயலைக் கொச்சைப் படுத்த முடியவில்லை"[2] என்னும் வரிகளில் பிற உயிர்கள் மீது அன்பு கொண்டு வாழும் மரியம்மா கதாபாத்திரம் மூலம் அன்புடையோர் தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் பிறருக்காகக் கொடுக்க முன்வருவார் என்னும் திருவள்ளுவரின் கருத்தை நிறுவுகிறார் ஹிமானா சையத்.*

**பொறுமை**

*பொறுமை கடலினும் பெரிது. பொறுமையால் பல காரியங்களைச் சாதிக்கலாம். அவசரத்தாலும், கோபப்படுவதாலும் காரியங்கள் கெட்டுவிடும். பொறுமையுடன் இருப்பதால் உறவு பலப்படும். பொறுமை குறித்து இறைவனின் இறுதி வேதமான திருக்குர்ஆனில், "இறை நம்பிக்கை கொண்டவர்களே! பொறுமையைக் கைக்கொள்வீர்களாக! அசத்தியவாதிகளுக்கு எதிரில் உறுதியாக நிலைத்து நிற்பீர்களாக! (சத்தியத்திற்குத் தொண்டு புரிய) எப்பொழுதும் ஒருங்கிணைந்து முனைப்புடன் இருப்பீர்களாக! மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சியே வாழ்வீர்களாக! (இதனால்) நீங்கள் வெற்றியாளர்களாய்த் திகழக்கூடும்!"[3] எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*மேலும், இறைவனின் இறுதித்தூதரான நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக "எந்த மனிதர் பொறுமையாயிருக்க முயல்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் பொறுமையை அளிப்பான். பொறுமையை விடச் சிறந்ததும் பல நன்மைகளைக் குவிக்கக் கூடியதுமான கொடை வேறெதுவுமில்லை"[4] (புகாரி, முஸ்லிம்) என்ற நபிமொழி மூலம் பொறுமையின் சிறப்பை அறியலாம்.*

புதிய அலையம்

ஹிமானா சையத் தன்னுடைய 'தகுதிகள்' என்னும் கதையில் வரும் கதாபாத்திரங்கள் மூலம் பொறுமையின் சிறப்புகளை வெளிப்படுத்துகிறார்.

"என்ன ஹஜ்ரத் ? அவரு ஒங்களப்பத்தி ரொம்ப மட்டரகமாக கமெண்ட் அடிச்சிக்கிட்டிருக்காரு நீங்க இப்படிச் சொல்றீங்க ? அது தெரியுமா உங்களுக்கு ? தெரியுங்க, சிலபேர் சொன்னாங்க. தெரிஞ்சிருந்தும் உங்களுக்குக் கோபம் வரலியா? ஏங்க கோபப்படனும்? மனுஷங்களோட தரஜாவை கணிக்கிறதுக்கு மனுஷனுக்கு ஏதுங்க உரிமை? அல்லாஹ்வோட உரிமையை நாம் எடுத்துக்கிறலாமா ?"[5] என்னும் வரிகளில் பொறுமையாயிருந்த சின்ன பள்ளி இமாமின் செயலால் ஊரில் அவருக்கு மேலும், புகழ் கிடைப்பதாகக் கதையை அமைத்துள்ளார் ஹிமானா சையத்.

**நட்பு**

நட்பு என்பது இருவரிடையே அல்லது பலரிடையே ஏற்படும் ஒரு உறவாகும். நண்பர்கள் தங்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை மறந்து ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வார்கள். நட்பு ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் கூட்டு வாழ்க்கையிலும் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வரும் ஆற்றல் பெற்றது. நட்பு குறித்த திருவள்ளுவரின்

" நிறைநீர நீரவார் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதயார் நட்பு."[6]

என்ற குறளின் பொருளுக்கேற்ப ஹிமானாத் சையத் தன்னுடைய 'சாக்கடை மனசு' சிறுகதையில்,

"ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரியரானாலும், தன் விடாமுயற்சியால் தன் மூத்த மகனை டாக்டராக்கியிருந்தார் பசீர்!

குழந்தையில்லாத தன் நண்பன் ஜமாலை முன் வைத்து தன் மற்றொரு நண்பனான ஜலாலின் மகளை எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் தன் மகனுக்கு திருமணம் முடிக்க பசீர் எடுத்திருந்த முடிவு ஜமாலை நெகிழ வைத்ததில் வியப்பில்லை தான்!"[7] என்னும் வரிகளில் அறிவுடையவரின் நட்பு பிறை நிறைந்து வருதல் போன்ற தன்மையுடையது என்பதை நட்பிற்கு இலக்கணமாகப் பசீரையும்,

"டாக்டர் பையன், தன்னை உட்கார வச்சி சாப்பாடு போடுவான்னுதேன். பசீர் கனவு காணுறான்! நீ வேணுண்டா பாரு ஜமாலு, அந்தப் பையன் இவனுக்கு நாமம் போட்டுட்டு எவளையாவது கட்டிக்கிட்டு ஓடிப்போகப் போறான். படிச்ச இடத்திலேயே ஏதோ கசமுசாவாம் என்று காழ்ப்புணர்ச்சியின் உச்சத்தைக் கொட்டிய போது, ஜலாலின் சாக்கடை மனசை வெளிப்படையாகப் புரிந்து கொண்டார் ஜமால்"[8] என்னும் வரிகளில்

*அறிவில்லாதவரின் நட்பு முழுமதி தேய்ந்து பின்செல்லு ம் தன்மையுடையது என்பதை நட்புக்கே களங்கமான ஜலாலையும் குறிப்பிட்டுள்ளார் ஹிமானா சையத்.*

**விருந்தோம்பல்**

*மனிதன் செய்யும் அறச் செயல்களில் மிகவும் சிறந்தது விருந்து உபசரிப்பதாகும் . விருந்து உபசரிப்புகளில் ஏழைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ச் செல்வந்தர்களுக்கு மட்டும் முக்கியத்துவம் தருவதை இஸ்லாம் வெறுக்கின்றது என்பதை,*

*விருந்துகளில் மிகவும் மோசமான விருந்து ஏழைகளை ஒதுக்கி வைத்து விட்டு நடத்தப்படும் விருந்து ஆகும் என இறைவனின் இறுதித் தூதரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும்,*

*''தன் பக்கத்திலிருக்கும் அண்டைவீட்டார் பசித்திருக்க தான் மட்டும் வயிறார உண்பவர் ஓர் இறைநம்பிக்கையாளராய் இருப்பதில்லை '' (மிஷ்காத்) எனவும் நபிமொழி கூறுகிறது.*

*ஒரு வீட்டிற்கு செல்பவர் களும் சரி, அந்த வீட்டில் உள்ளவர் களும் ச ரி மூன்று அல்லது நான்கு வகை உணவுகளை ச் செய்து சாப்பிட்டால் தான் விருந்து என்று எண்ணாமல், வீட்டில் இருக்கும் உணவை மனமகிழ்ச்சியுடன் பகி ர்ந்து சாப்பிடும் போது அனைவரின் மனமும் நிறைவடையும் . எனவே இந்த விருந்தோம்பல் என்ற சிறந்த பண்பை உண ர்ந்து அவ்வப்போது நாம் பழக்கத்தில் கொண்டு செயல்படுத்தி வந்தால் நாம் மனம் மகிழ்ச்சி அடையலாம்.*

*''பிரியாணியின் மணம் அந்தப்பகுதி முழுவதும் வியாபித்திருந்தது . வீட்டுக்கு வெளியே - தாழ்வாரத்தில் நின்றிருந்த ஹமீது ராவுத்த ர், விருந்து சாப்பிட்டு விட்டு வெளியே வந்தவர்களிடம் கை கொடுத்து - கட்டிப் பிடித்து அன்பைப் பரிமாறிக் கொண்டா ர்! துஆச் செய்யுங்க பாய் ; அடுத்த ஹஜ்ஜுக்குப் போறதா நிய்யத் வச்சுக் கோங்க என்று மறக்காமல் ஒவ்வொருவரிடமும் சொன்னார்!*

*நெருங்கிய உறவினர்கள் - நண்பர்களிடம் அறிஞ்சோ அறியமலோ ஏதாச்சும் தவறு செய்திருந்தா, அல்லா - ரஹூலுக்காக மன்னிச்சிடுங்க என்று பாவ மன்னிப்புக்கோரி ஆன்மீகப் பயிற்சியும் எடுத்துக் கொண்டார்!*

*தனி மனிதருக்குள் ஏற்படும் மனஸ்தாபங்களுக்குப் பரிகாரம் பாதிக்கப்பட்ட மனிதனிடம் மன்னிப்புக்கோ ரிப் பெறுவது தான் . இறைவனிடம் பிரார்த்திப்பது அல்ல என்ற மகத்தான இஸ்லாமிய த் தத்துவத்தின் வெளிப்பாடல்லவா அது!*

*அனேகமாக ஊ ரிலுள்ள ஆண்கள் எல்லோரும் சாப்பிட்டு முடித்து விட்டா ர்கள்! கடைசிப்பந்தி நடந்து கொண்டிருந்தது!"*[10] என்னும் வரிகளில் ஹமீது ராவுத்தர் ஊரிலுள்ள அனைவருக்கும் விருந்து உபசரிப்பு செய்வது பற்றி ப் 'பாசம்' என்னும் சிறுகதை வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார் ஹிமானா சையத்.

**முடிவுரை**

ஹிமானா சையத் அவர் களின் மா ரியம்மா சிறுகதைத் தொகுப்பில் உள்ள கதைகளில் வெளிப்படும் அன்பு , பொறுமை, நட்பு, விருந்தோம்பல் போன்ற மனித மாண்புகளைப் பின்பற்றினால் வாழ்வில் அன்பும் அமைதியும் மகிழ்ச்சியும் பெருகும் என்பதில் ஐயமில்லை.

**சான்றெண் விளக்கக் குறிப்புகள்**


1. முருகன்.ப.(உ.ஆ.), திருக்குறள், ப.17
2. ஹிமானா சையத், மரியம்மா, ப.92
3. மௌல்வி குத்புதீன் அஹ்மத் பாகவி.ஏ., மற்றும் மௌலவி அப்துல் ரவுஃப் பாகவி.ஆர்., (மொ.ஆ.), திருக்குர்ஆன், ப.198
4. மௌலவி குத்புதீன் அஹ்மத் பாகவி.ஏ., அண்ணல் நபிகளார் வாழ்வினிலே, ப.290
5. ஹிமானா சையத், மரியம்மா, பக் 130-131
6. முருகன்.ப. (உ.ஆ.) திருக்குறள், ப.161
7. ஹிமானா சையத், மரியம்மா, ப.27
8. மேலது., ப.28
9. மௌலவி குத்புதீன் அஹ்மத் பாகவி.ஏ., அண்ணல் நபிகளார் வாழ்வினிலே, ப.158
10. ஹிமானா சையத், மரியம்மா, பக்.142 -143


………………………………………………………………..